PR NO 732 நாள் : 08.12.11.

<u>பத்திரிகைச் செய்தி</u>

8.12.2011 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் தலைமையில் 12வது ஐந்தாண்டு திட்டத்தை தயாரிப்பதற்கான மீன்வளத்துறையின் அலுவல் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல் மீன்வளம், மீன் உற்பத்தி, மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்குதளம், மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் விற்பனைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை புதிதாக ஏற்படுத்துதல், மேம்படுத்துதல், மீன்வளத் துறைக்கான வழிகாட்டுதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகளை உருவாக்குதல் மற்றும் துறைக்கான மனித வள மேம்பாட்டினை உயர்த்துதல் ஆகியன குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறையின் அரசு செயலாளர் மற்றும் அலுவல் குழு தலைவர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் திரு.இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., மற்றும் முனைவர் பால்ராஜ், உறுப்பினர் செயலாளர், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம், முனைவர் ஒய். எஸ். யாதவா, இயக்குநர், வங்காள விரிகுடா திட்டம், முனைவர் பால்ராஜ், உறுப்பினர்-செயலர், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம், முனைவர் பொன்னையா, இயக்குநர், மத்திய உவர்நீர் உயிரின வளர்ப்பு நிறுவனம் , திரு வெங்கடேசன், முனைவர் விவேகானந்தன், முனைவர் நந்திஷா, முனைவர் ஆண்ட்ரோஸ், முனைவர் பெலிக்ஸ், முனைவர் திருநாவுக்கரசு, சந்திரிகா ஷர்மா, திரு ஜெயபால், திரு பி.கே. பிரசாத், திருமதி காயத்ரி மற்றும் மீன்வளத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

8/12/11

(ககன்தீப் சிங் பேடி)
அரசு செயலர், கா.ப.பா.ம மீன்வளத் துறை

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9